<u>பி.வா.சா.1 ___ முனியப்பன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

சகுந்தலா, வாதிகளுக்கு அவர்களுக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தின் உரிமை முழுவதையும் விற்பனை செய்துவிட்டதாக அவர்களே கூறியிருக்கும் நிலையில் குறைவாக விற்பனை செய்தார்கள் என்று எதிர் வழக்காட எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரிதான். கிணர் எத்தனை ஆண்டுகளுக்கு வெட்டப்பட்ட கிணர் என்று தெரியுமா என்றால் சுமார் 60 ஆண்டுகளாகியிருக்கும். அப்போது அந்த கிணற்றின் பாசனம் கவளை வாரிதான் என்றால் சரிதான். அப்போது கவளை வாரி 35 அடி போகுமா என்றால் 60அடி வரை போகும். கிணற்றிற்கு வெடி வைத்துதான் ஆழப்படுத்தமுடியும் என்றால் சரிதான். வெடி வைக்கும்போது சுற்று வட்டாரத்தில் எத்தனை அடிக்கு கற்கள் சிதறிவிழும் என்றால் அந்த கிணற்றில் பாறைகள் இல்லை மண் மட்டும் இருந்ததால் அங்கேயே விழுந்துவிடும். அந்த கிணற்றில் பாறை உள்ளது என்றும் வழக்கிற்காக வேண்டி நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கவளை வாரி மூலமாகத்தான் மண்ணை அல்ல முடியும் என்றால் அவர்கள் பக்கம் அவர்கள் எடுத்துக்கொள்வார்கள் எங்கள் பக்கம் நாங்கள் எடுத்துக்கொள்வோம். வாதிகள் கிரயம் பெற்ற நிலம் கிணற்றிலிருந்து எத்தனை அடி தள்ளி உள்ளது என்றால் 4 அடி தூரம் உள்ளது. எந்த திசையில் அவர்கள் நிலம் உள்ளது என்றால் வடக்கு திசையில் உள்ளது. கவளை வாரி இருக்கும்போது நிலங்களுக்கு கால்வாய் வழியாகத்தான் பாசனம் செய்யமுடியும் என்றால் சரிதான். ஏரி கால்வாய் மூலமும் பாசனம் செய்யப்பட்டது என்றால் சரிதான். பிவிசி பைப் எப்பொத போடப்பட்டது என்றால் தோரயமாக சுமார் 2 ஆண்டுகளுக்குள் இருக்கும். வாதிகள் கிரயம் பெற்ற நிலத்திற்கு அவர்கள் பிவிசி பைப் புதைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அதேபோல் நாங்களும் எங்கள் நிலத்திற்கு பைப் புதைத்துதான் அனுபவித்து

வருகிறோம் என்றால் சரிதான். கிணற்றிலிருந்து எத்தனை பைப்புகள் செல்கின்றன என்றால் வாதிகள் நால்வரும் சேர்ந்து ஒன்றாக போட்டுள்ளார்கள் நான் தனியாக போட்டுள்ளேன். கிணற்றை ஆழப்படுத்துவதற்காகவும், கால்வாய் மூலம் பாசனம் செய்வதற்காகவும் கிணற்றை சுற்றியுள்ள நிலங்கள் பொதுவாக விடப்பட்டுள்ளன என்று சொன்னால் சரியல்ல. கிணற்றை சுற்றியுள்ள நிலங்களை பிரித்துக் கொடுத்துவிட்டார்கள் என்றால் என் தாத்தா 1986ம் ஆண்டே பிரித்துக் கொடுத்துவிட்டார். எனக்கு எவ்வளவு பிரித்துகொடுத்தார் என்றால் எனக்கு 8.¼ சென்ட்டும், அவர்களுக்கு 2.¾ சென்ட்டும் பிரித்துகொடுத்துவிட்டார்கள். எனக்கு அவ்வாறு 8.¼ சென்ட் பிரித்துக்கொடுத்ததாக என்னுடைய பதிலுரையில் கூறியிருக்கிறேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 15.2.1980ம் தேதியிட்ட பாகப்பத்திரத்தில் "பொது கிணற்றிலிருந்து ஒருவர் பாகத்திலிருந்து மற்ற பாகத்திற்கு தண்ணீர் கொண்டுபொகவும், வரவும் உள்ள வாய்க்கால் வழிநடை பாததியங்களை யாரும் தடைசெய்யக்கூடாது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிணற்றை ஆழப்படுத்துவதற்கு டிராக்டரோ, மண் அல்லுவதற்கு வாகனங்களோ வரப்போக வழி வேண்டும் என்றால் சரிதான். வாதிகளும் அவர்கள் பாக நிலத்திலிருந்து கிணற்றிற்கு வந்து பாசனம் செய்து செல்வதற்கு வழி உண்டு என்றால் சரிதான். கிணற்றை சுற்றியுள்ள பொதுவாக உள்ள இடத்தில் கட்டிடம் யார் கட்டினால் மற்றவர் உரிமைக்கு பாதிப்பு ஏற்படும் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் அவ்வாறு தடைசெய்து கட்டிடம் கட்டிவிட்டால் என்னால் தண்ணீர் பாய்க்க முடியுமா என்றால் அவர்கள் பக்கம் அவர்கள் கட்டிக்கொள்ளலாம் பொதுவாக எதுவும் இல்லை. வாதிகள் அவர்கள் பாகச்சொத்தில் கட்டிக்கொள்ளலாம் என்றும் பொதுசொத்தில் கட்டக்கூடாது என்று சொன்னால் சரிதான். அதேபோல் என்னுடைய பாகத்தில்தான் கட்டமுடியும் என்றும் பொதுசொத்தில்

கட்டஇயலாது என்றால் அங்கு பொதுசொத்தே எதுவும் இல்லை. பாகப்பிரிவினை பத்திரத்தில் மேற்படி கிணறும் சுற்றியுள்ள நிலங்களும் பொதுவாகத்தான் குறிப்பிட்டு பத்திரம் எழுதியுள்ளார்கள் எனாறல் இல்லை. தற்போதும் அது கூட்டாகத்தான் உள்ளது என்றும் அது என்னுடைய எதிர்வழக்குரையிலேயே கூட்டாக இருப்பதாக ஒப்புக்கொண்டுள்ளேன் என்றும் அதை மறுத்து தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை தாய் எத்தனை கூரை வீடுகளில் குடியிருந்து வந்தனர் என்றால் முதலில் ஒரு கூரை வீட்டில் இருந்தார்கள் குடும்பம் பெருக பெருக 3 கூரை வீடுகள் ஆனது. அந்த கூரை வீடுகள் நீள அகலம் என்னவென்றால் ஒவ்வொரு வீடும் 22 அடிநீளமும், 20 அடி அகலமும் இருந்தது. கிருஷ்ணனுக்கு அங்கு வீடு இருந்ததா என்றால் இல்லை. பாகப்பிரிவினை பத்திரம் எழுதியபோது அந்த 3 வீடுகளும் இருந்தனவா என்றால் இருந்தன. அந்த பத்திரத்தில் 3 வீடுகள் இருந்ததாக கூறியிருக்கிறார்களா என்றால் 2 வீடுகள் இருப்பதாக கூறியிருக்கிறார்கள் ஒருவீடை மாட்டு தொழுவத்திற்காக விட்டுவிட்டார்கள். (தற்போது சாட்சி வீடுகள் பற்றி அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் எழுதப்படவில்லை என்று கூறுகிறார்) ஆதியில் 3 கூரை வீடுகள் இருந்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் தக்கல செய்துள்ள பதிலிலும் 2 வீடுகள் இருந்ததாக கூறவில்லை என்றால் கூறியிருக்கிறேன். பாகப்பிரிவினை பத்திரம் செய்தபோது ஒருகூரை வீடு சிதலமடைந்தது என்றால் சரிதான். அந்த வீட்டில் எத்தனை மின் இணைப்புகள் இருக்கின்றன என்றால் 2 மின் இணைப்புகள் என்னுடைய பெயரிலும் என் தம்பி பெயரிலும் இருக்கின்றன. ஒரே வீட்டில் இரண்டு பிரிவுகளாக கொடுக்கப்பட்டதா என்றால் தனித்தனி வீடுகளுக்காக கொடுக்கப்பட்டது. என்னுடைய பெயரிலுள்ள மின் இணைப்பு எண் என்னவென்றால் 316 ஆகும் என்தம்பி பெயரிலுள்ள

மின் இணைப்பு எண் என்னவென்றால் 365 ஆகும். என் தம்பி பெயரிலுள்ள மின் இணைப்பு பற்றி பதிலுரையில் கூறவில்லை என்றும் ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். கூரைவீட்டை இடித்துவிட்டு ஓட்டுவீடு கட்டியுள்ளதாக பதிலுரையில் கூறியிருள்ள நிலையில் கூரை வீடு எவ்வளவு அளவுகளில் இருந்தது என்றோ, தற்போது என்ன அளவுகளில் வீடு கட்டுகிறோம் என்றோ பதிலில் குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான். நாங்கள் கூரை வீட்டில் குடியிருந்தை வாதிகள் எப்போதும் தடுக்கவில்லை என்றால் சரிதான். கூரை வீடு இருந்ததை விட அதிகமான விஸ்தீரணத்தில் ஓட்டுவீடு கட்டுவதால்தான் வாதிகள் ஆட்சேபனை செய்தார்கள் என்றால் சரியல்ல பொறாமையில் ஆட்சேபித்தார்கள். கூரை வீட்டில் உள்ள மின் இணைப்புதான் என்னுடைய பெயரில் இருக்கிறது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அவர்கள் புதியதாக கட்டிடம் கட்ட கடகால் போட்டுள்ளதாக அறிக்கையில் கூறியிருக்கிறார் என்றால் சரிதான். நாங்கள் புதியதாக கட்டப்படும் கட்டிடத்திற்கும் கிணற்றிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 50 அடி தூரம் இருக்கும். கிண்றறிக்கு எந்த திசையில் கட்டிடம் உள்ளது என்றால் தென்மேற்கு திசையில் உள்ளது. நீதமன்றம் ஆணையர் அறிக்கையில் வட்ட கிணறும் கவளை வாரியும், கல்கட்டும் உள்ளதாக கூறியிருக்கிறார் என்றால் கவளை வாரி இருப்பதாக குறிப்பிடவில்லை.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.